உ



வட்டுக்கோட்டை மூளாய் வீதி,

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்

## அமரர் திரு

# வேலுப்பிள்ளை சிவராசா

## அவர்கள்

சிவனார் செய்பொற்கழல் சேர்ந்தமை குறித்த

# நினைவு மலர்

விஷு ஞு ஐப்பசி மீ 24 உ

2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## விநாயகர் வணக்கம்



திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் [ தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சமர்ப்பணம்

அன்னையாய் தந்தையாய்
அன்பான காவலனாய்
அருமையான ஆசானாய்
அரியதொரு வழிகாட்டியாய்
அறிவுடைய பெருமகனாய்
அரும்பணியால் எங்களையே
அவனியிலே உயர்த்திட்ட எம்
அருமை அப்பாவின் நினைவாக
அந்த ஆண்டவனுக்கே
சமர்ப்பணம்!


விஷு ஐப்பசி 7
2001-10-24

- பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனடி சேர்ந்த அமரர் திரு

# வேலுப்பிள்ளை சிவராசா



**தோற்றம்:- 1931-09-17** **மறைவு:- 2001-09-25**

ஆண்டு விஷுவ தனில் ஆனதொரு புரட்டாதியில்
பூண்டதிதி பூர்வத்து அட்டமியில் - மாண்புடைய
சிவராசாப் பெருமகனும் சேர்ந்தனனே சிந்தைநிறை
சிவன் அவன் திருவடிக்கே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவமயம்

# தோத்திர மாலை

திருச்சிற்றம்பலம்

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவே என்னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவேஎன் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமரரேறே.

## மாணிக்கவாசகர் சுவாமிகள் திருவாசகம்

தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாது நீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யானிதற் கிலன்ஓர் கைம்மாறே.

## திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண்டு என்னுள்
இருட்பிழம் பறஎறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி
அடல்விடைப் பாகா அம்பலக் கூத்தா
அயனொடு மால் அறியாமைப்
படரொளி பரப்பின் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேந்தனார் திருப்பல்லாண்டு

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்கு மென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்து நின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## சேக்கிழார் திருப்புராணம்

சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம்
போற்றி
வல்லைவந் தருளி என்னை வழித்தொண்டு
கொண்டாய் போற்றி
எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள்
செய்தாய் போற்றி
தில்லையம் பலத்துளாடும் சேவடி போற்றி என்ன

## அருணகிரிநாத சுவாமிகள் திருப்புகழ்

எதிரிலாத பக்தி தனைமேவி
இனிய தாள்நி னைப்பை இருபோதும்
இதயவாரி திக்குள் உறவாகி
எனதுளேசி றக்க அருள்வாயே
கதிர் காம வெற்பி லுறைவோனே
கனக மேரு ஒத்த புயவீரா
மதுரவாணி யுற்ற கழலோனே
வழுதி கூன்நி மிர்த்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கோளறு திருப்பதிகம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொ டாமைஇவை மார்பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றொடேழு பதினெட்டொடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசை தெய்வமான பலவு
மருதெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதி நுதல் மங்கையோடு வடபாலிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனொடு தூதர்
கொடுநோய்க ளான பலவு
மதிகுண நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்த னோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உரும் இடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

வாள்வரி அதளதாடை வரி கோவணத்தர்
மடவாள்த் னோடும் உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

செப்பிள முலை நன் மங்கை ஒருபாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாள்த னாடும் உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரையன்றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே

தேனமர் பொழில்கொள் ஆலைவிளை செந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

---

☐ இப்பதிகத்தை தினமும் ஓதினால் கிரகப்பீடை நோய் அரச பயம், சத்துருபயம், மிருகபயம், பூதிபிசாசுபயம் யாவும் நீங்கி பயன்கள் யாவும் சித்திக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிவபுராணம்

**காப்பு**

தொல்லை யிரும்பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல்கள் வெல்க
ஈசன்அடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசன்அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன்அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன்அடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓயஉரைப் பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும்ஆறு ஒன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்
செல்லஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த் எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியோர்க்கு நல்கி
நிலந்தான்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம்ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியனே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

# திருவெம்பாவை

1. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடம் கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவி தான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்து
ஒலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம் மறந்து
போது ஆர் அமளியின் மேல் நின்றும் புரண்டும்
இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எம்தோழி பரிசு ஏல் ஓர் எம்பாவாய்

2. பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போது எப்போது இப்போது ஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீ சீ இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார் யாமார் ஏல் ஓர் எம்பாவாய்

3. முத்து அன்ன வெண்நகையாய் முன்வந்து
எதிர் எழுந்து என்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்து உன் கடைதிறவாய்
பத்து உடையீர் ஈசன்பழ அடியீர் பாங்கு உடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால்
பொல்லாதோ
எத்தோ நின்அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏல் ஓர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஒள் நித்திலம் நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணம் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒரு மருந்தை வேதம் விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்து உள்ளம்
உள்நெக்கு நின்று உருக யாம்மாட்டோம் நீயே வந்து
எண்ணிக் குறையில் துயில் ஏல் ஓர் எம்பாவாய்

5. மால் அறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போல் அறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடை திறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவு அரியான்
கோலமும் நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய் காண்
ஏலக்குழலி பரிசு ஏல் ஓர் எம்பாவாய்

6. மானே நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவு அரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து
ஆட்கொண்டு அருளும்
வான் வார்கழல் பாடிவந்தோர்க்கு உன்வாய் திறவாய்
ஊனே உருவாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப் பாடு ஏல் ஓர்
எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இரும் சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய் திறப்பாய்
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகு ஒப்பாய்
என்னானை என் அரையன் இன் அமுது என்று
எல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய் இன்னம்
துயிலுதியோ
வன்நெஞ்சம் பேதையர் போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசு ஏல் ஓர் எம்பாவாய்

8. கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கு எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருட்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழி ஈது என்ன உறக்கமோ வாய் திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆம் ஆறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழை பங்காளனையே பாடு ஏல் ஓர் எம்பாவாய்

9. முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப்
பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர்அடியோம்
உன் அடியார் தாள் பணிவோம் ஆங்கு
அவர்க்கு பாங்கு ஆவோம்
அன்னவரே என் கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்ன வகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம் ஏல் ஓர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, பாதாளம் ஏழினும் கீழ்சொல் கழிவு பாதமலர்
போது ஆர் புனைமுடியும் எல்லாம் பொருள் முடிவே
பேதை ஒரு பால் திருமேனி ஒன்று அல்லன்
வேதம் முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டர் உளன்
கோது இல் குலத்து அரன் தன் கோயில்
பிணாப் பிள்ளைகாள்
ஏது அவன் ஊர் ஏது அவன் பேர் ஆர் உற்றார்
ஆர் அயலார்
ஏது அவனைப் பாடும் பரிசு ஏல் ஓர் எம்பாவாய்

11. மொய்ஆர் தடம்பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன்கழல் பாடி
ஐயா வழிஅடியோம் வாழ்ந்தோம்காண் ஆர்
அழல் போல்
செய்யா வெண் நீறுஆடி செல்வா சிறுமருங்குல்
மைஆர் தடம்கண் மடந்தை மணவாளா
ஐயா நீஆள் கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும்வகை எல்லாம் உய்ந்து ஒழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமை ஏல் ஓர் எம்பாவாய்

12. ஆர்த்த பிறவித்துயர் கெட நாம் ஆர்த்து ஆடும்
தீர்த்தன் நல்தில்லைச் சிற்றம்பலத்தே தீ ஆகும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வாரகலைகள்
ஆர்ப்பு அரவம் செய்ய அணிகுழல் மேல்வண்டு ஆர்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்து உடையான்
பொன்பாதம்
ஏத்தி இரும்சுனை நீர்ஆடு ஏல் ஓர் எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. பைங்குவளைக் கார்மலரால் செம்கமலப்பைம்போதால்
அங்கம் குருகு இனத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்று இசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பு சிலம்பு கலந்து ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப்பூம் புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர் எம்பாவாய்

14. காது ஆர் குழையாடப் பைம்பூண் கலன் ஆடக்
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்
சீதம் புனல் ஆடிச் சிற்றம்பலம் பாடி
வேதம் பொருள்பாடி அப்பொருள் ஆமா பாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்து எடுத்த பெய்வளை தன்
பாதம் திறம்பாடி ஆடு ஏல் ஓர் எம்பாவாய்

15. ஓர் ஒருகால் எம்பெருமான் என்று என்றே
நம் பெருமான்
சீர் ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீர் ஒரு கால் ஓவா நெடும் தாரை கண் பனிப்பம்
பார் ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான் பணியாள்
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆம் ஆறும்
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர் தான்
வார் உருவம் பூண்முலையீர் வாய் ஆர நாம் பாடி
ஏர் உருவம் பூம்புனல் பாய்ந்து ஆடு ஏல் ஓர்
எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்து எம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்து எம்பிராட்டி திருவடிமேல்
பொன்அம் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவிநம் தம்மை ஆள்உடையாள்
தன்னில் பிரிவுஇலா எல்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய் மழை ஏல் ஓர் எம்பாவாய்

17. செங்கண அபன்பால் திசைமுகன் பால் தேவர்கள்
பால்
எங்கும் இலாதது ஓர் இன்பம் நம்பாலதாக்
கொங்குஉண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செம் கமலம் பொன்பாதம் தந்து அருளும் சேவகனை
அம்கண் அரசை அடியோங்கட்கு ஆர் அமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம் திகழப்
பங்கயப்பூம் புனல் பாய்ந்து ஆகு ஏல் ஓர் எம்பாவாய்

18. அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறு
அற்றால் போல்
கண்ஆர் இரவி கதிர்வந்து கார் கரப்பத்
தண்ஆர் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ஆகி ஆணாய் அலியாய்ப் பிறங்கு ஒளிசேர்
விண்ஆகி மண்ஆகி இத்தனையும் வேறு ஆகிக்
கண்ஆர் அமுதமும்ஆய் நின்றான் கழல் பாடிப்
பெண்ணே இப்பூம் புனல்பாய்ந்து ஆடு ஏல் ஓர்
எம்பாவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று
அங்கு அப்பழஞ் சொல்புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கு ஏன்று உரைப்போம் கேள்
எம்கொங்கை நின்அன்பர் அல்லார் தோள் சேரற்க
எம்மை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம் கண்மற்று ஒன்றும் காணற்க
இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்
ஏங்குஎழில் என்ஞாயிறு எமக்கு ஏல் ஓர் எம்பாவாய்

20. போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுக நின் அந்தமாம் செம் தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொன்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணை அடிகள்
போற்றி மால்நான் முகனும் காணாத புண்டரிகம்
போற்றி யாம் உய்ய ஆள்கொண்டருளும்
பொன்மலர்கள்
போற்றி யாம் மார்கழிநீர் ஆடு ஏல் ஓர் எம்பாவாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற்சுண்ணம்

முத்து நல்தாமம் பூமாலை தூக்கி
முளைக்குடம் தூபம் நல்தீபம் வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நா மகளோடு பல்லாண்டு இசைமின்
சித்தியும் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்துகவரி கொள்மின்
அத்தன் ஐயாறன் அம்மானைப் பாடி
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும் நாமே 1

பூ இயல்வார் சடை எம்பிராற்குப்
பொன் திருச்சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துஉடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எம்கோன் எம்கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும் நாமே 2

சுந்தரம் நீறு அணிந்தும் மெழுகித்
தூய பொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டி எங்கும்
எழில்சுடர் வைத்துக் கொடி எடுமின்
அந்தரர் கோன் அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன் நல்வேலன் தாதை
எம்தரம் ஆள் உமையாள் கொழுநற்கு
ஏய்ந்த பொன்சுண்ணம் இடித்தும் நாமே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசு அணிமின்கள் உலக்கை எல்லாம்
காம்பு அணிமின்கள் கறை உரலை
நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுலக என்று வாழ்த்தித்
தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திரு ஏகம்பன் செம்பொன் கோயில் பாடிப்
பாசம் வினையைப் பறித்து நின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 4

அறுகு எடுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்று இந்திரனோடு அமரர்
நறுமுறு தேவர் கணங்கள் எல்லாம்
நம்மில் பின்பு அல்லது எடுக்க ஒட்டோம்
செறிவு உடை மும்மதில் எய்த வில்லி
திரு ஏகம்பன் செம்பொன் கோயில் பாடி
முறுவல் செவ்வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 5

உலக்கை பல ஓச்சுவார் பெரியோர்
உலகம் எலாம் உரல் போதாது என்றே
கலக்க அடியவர் வந்து நின்றார்
காண உலகங்கள் போதாது என்றே
நலக்க அடியோமை ஆண்டு கொண்டு
நாள் மலர்ப்பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்து பொற்சுண்ணம் இடித்தும் நாமே 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகம் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாம் எழுந்து ஆர்ப்ப ஆர்ப்ப
நாடவர் நம் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடகம் மெல்அடி ஆர்க்கும் மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடகம் மாமாலை அன்ன கோவுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 7

வாள் தடம்கண் மடம் மங்கை நல்லீர்
வரிவளை ஆர்ப்ப வண்கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டம் துதைந்து இலங்கச்
சோத்துஎம் பிரான் என்று சொல்லிச் சொல்லி
நாள் கொண்ட நாண் மலர்ப் பாதம் காட்டி
நாயின் கடைப்பட்ட நம்மை இம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 8

வையகம் எல்லாம் உரல் அது ஆக
மாமேரு எனும் உலக்கை நாட்டி
மெய் எனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப் பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கை பற்றி
ஐயன் அணி தில்லை வாணனுக்கே
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்து அணி கொங்கைகள் ஆட ஆட
மொய்குழல் வண்டு இனம் ஆட ஆடச்
சித்தம் சிவனொடும் ஆட ஆடச்
செம் கயல் கண் பனி ஆட ஆடப்
பித்து எம்பிரானொடும் ஆட ஆடப்
பிறவி பிறரொடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 10

மாடு நகைவாள் நிலா எறிப்ப
வாய் திறந்து அம்பவளம் துடிப்பப்
பாடுமின் நம் தம்மை ஆண்ட ஆறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம் பெருமானைத் தேடிச்
சித்தம் களிப்பத் திகைத்துத் தேறி
ஆடுமின் அம்பலத்து ஆடினானுக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 11

மை அமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் தன்னை
ஐயனை ஐயர்பிரானை நம்மை
அகப்படுத்து ஆட்கொண்டு அருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போது அரிக்கண் இணைப் பொன்தொடித்தோள்
பைஅரவு அல்குல் மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்இடைச் செம்துவர் வாய் கரும்கண்
வெள் நகைபண் அமர்மென் மொழியீர்
என்னுடை ஆர்அமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன் எம்ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கை நல்லீர்
பொன் திருச்சுண்ணம் இடித்தும் நாமே 13

சங்கம் அரற்றச் சிலம்பு ஒலிப்பத்
தாழ்குழல் சூழ்தரும் மாலை ஆடச்
செம் கனிவாய் இதழும் துடிப்பச்
சேயிழையீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அரா இரைக்கும்
கற்றைச் சடைமுடியான் கழற்கே
பொங்கிய காதலில் கொங்கை பொங்கப்
பொன் திருச்சுண்ணம் இடித்தும் நாமே 14

ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற்கு அரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பு அறுத்து ஆண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும்பு ஏற வாழ்த்திப்
பானல் தடம் கண்மடந்தை நல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாளும் வந்து அன்பர் தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டு அறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சேஅகம் ஏந்திய வெல் கொடியான்
சிவபெருமான் புரம் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்தும் நாமே 16

தேன் அகம் மா மலர்க்கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வான்அகம் மா மதிப்பிள்ளை பாடி
மால்விடை பாடி வலக்கை ஏந்தும்
ஊன்அகம் மா மழுச் சூலம் பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனகம் ஆக நஞ்சு உண்டல் பாடிப்
பொன் திருச் சுண்ணம் இடித்தும் நாமே 17

அயன் தலைக்கொண்டு செண்டு ஆடல் பாடி
அருக்கன் எயிறு பறித்தல் பாடிக்
கயம் தனைக்கொன்று உரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலால் உதைத்தல் பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டு கொண்ட
நயம் தனைப் பாடி நின்று ஆடி ஆடி
நாதற்குச் சுண்ணம் இடித்தும் நாமே 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி
மத்தமும் பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழும் தென்தில்லை பாடிச்
சிற்றம்பலத்து எங்கள் செல்வம் பாடிக்
கட்டிய மாசுணக் கச்சை பாடிக்
கங்கணம் பாடிக் கவித்த கைமேல்
இட்டு நின்று ஆடும் அரவம் பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும் நாமே 18

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியும் ஆய்இருள் ஆயினார்க்குத்
துன்பமும் ஆய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியும் ஆய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமும் ஆய் வீடும் ஆயினாருக்கு
ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும் நாமே 20

வாய்மையே வெல்லும்
வாய்மையே வெல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டிக் குடியேசல்

வெண்பா

மாசின் முருகேயருக்கு மாதுதெய்வானைக்கு
மேசநே ரிட்டநையா ணியம்பவே — காசினியிற்
செஞ்சடில நின்றவெழிற் றேர்கயமுகத்தோன்
கஞ்சமலர்த் தாளிணையே காப்பு.

காசினியோர் புகழுமெட்டிக் குடிவேலவர்
கதவைத்திறக்குமே சற்பட — எழில்
கதவைத்திறக்குமே சற்பட.

மூஷிகவாகனமீதேறும் விநாயகன்
மூளரிமலரடியே காப்பு — எழில்
மூளரிமலரடியே காப்பு.

செய்யவடிவேலேந்து முருகர்வருகிற
சேதியறிந்தாளந்தமாது — தெய்வ
யானையறிந்தாளப்போது

பரிவுடன்வடிவேலர் முருகர்வாறாரென்று
படக்கென்றடைத்தா ளிப்போது — கதவை
சடக்கென் றடைத்தாளிப்போது

அடைத்தகதவுந் தெரியாமலே முருகேசர்
ஆசையினாலே மதிமயங்கியே — அவள்
ஆசையினாலே மதிமயங்கியே

தடதடவென்று விரைவினிலேவந்து
தட்டினார் கையினாற்றானே — கதவை
தட்டினார் கையினாற்றானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செண்பகவதியடி கதவைத்தட்டித்தட்டி
திறவென்று சொன்னவராரோ — இந்த
தெருவினில் வந்தவராரோ

எந்தன்கண்மணியே யறியாயோநான்
நான் எட்டிகுடிவேலவனானே — பெண்ணே
எட்டிகுடி வேலவனானே

எட்டிகுடியைவிட்டு விரைவினி லிரவிலே
எப்படிவந்தீர் சொல்லும் சுவாமி — நீர்
எப்படிவந்தீர் சொல்லும் சுவாமி

மாதுநின்முகமதி யொழியைக் கொண்டுவந்தேன்
மாதரசே யிந்தவேளை — எழில்
மாதரசே யிந்தவேளை

இந்தவேளை யிருகாத வழிநடந்து
எவ்விதம்நடந்து வந்தீரோ — சுவாமி
எவ்விதம்நடந்து வந்தீரோ சுவாமி

கட்டழகியுன்னை மனதில் நினைந்தபோதே
காதவழியு மரைநாழிகை — யிரு
காதவழியு மரைநாழிகை

அரைநாழியும் மைவிட்டுப் பிரியாளே
அந்தவள்ளி அறியாமலோடி வந்தீரோ — அவளுந்
தெரியாமலோடி வந்தீரோ

அந்தவள்ளியைவிட்டு உந்தன் முகத்தைக்காண
ஆசைகொண்டு தேடிவந்தேன் — பெண்ணே
யாசைகொண்டு காணவந்தேன்

காணவந்ததிலென்ன வாயிரமாகவே
கைப்பொருள் கொண்டுவந் தீரோ — சுவாமி
காணிக்கை கொண்டுவந் தீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேணுமென்றதையெல்லாம் நானிங்கே தருகிறேன்
விரைவுடனே சொல்லுவாயே — பெண்ணே
விரைவுடனே சொல்லுவாயே

சொல்லுவதுமில்லை யுமதுபொருளும் வேண்டாம்
துரிதத்தில் போம் நேயாள்விடே — சுவாமி
துரிதத்தில்போம் நேயாள் விடே

நேசமில்லாதவள் போல்நீ பேசுகிறாய்
நித்திரை மயக்கமோ — பெண்ணே
உனக்த நித்திரை மயக்கமோ

நித்திரைவிட்டுநீர் வருவீரென்றுநினைத்
திருப்பாளேவள்ளி போம் போம் — சுவாமி
நினைத்திருப்பாளே வள்ளி போம் போம்

போமென்றுநீர்சொல்ல ஞாயமல்லவே
நாம்போனாலென்ன கெட்டுப்போகும் — பெண்ணே
போனா என்ன கெட்டுப்போகும்

கெட்டுப்போகாதந்த சட்டக்கல்விகளெல்லாங்
கேட்பாரார்நீர் சொல்லும் — சுவாமி
இங்கு கேட்பவரார் சொல்லும் சுவாமி

கேட்கச்சொல்லியே யுன்னையாரடிக்கிறாரிப்போ
கேவலமெனையிகழாதே — பெண்ணே
கேவலமெனையிகழாதே

இகழவும்பேசவு மென்னாலாகாதந்த
இனியவள்ளிக்கே பொக்குந்தானே — சுவாமி
இனியவள்ளிக்கே பொக்குந்தானே

ஒக்கவெனை யணைந்தா லுன்னையெனிப் பிரியேன்
இறுதிசொன்னேன்மண்டலமறிய — பெண்ணே
உறுதிசொன்னேன் மண்டலமறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டலம்புகழ்வடி வேலர்வந்து முருகரே
வார்த்தைவழங்க வந்தீரோ போம் — போம்
வார்த்தை வழங்க வந்தீரோ

வார்த்தைபழகிடநான் வல்லவளல்லவுன்
மனதிற் கோபஞ்செய்யாதே — பெண்ணே
மனதிற் கோபஞ் செய்யாதே

போதும்போதுமிந்த உபசாரவார்த்தைசொல்லி
போதிக்கவந்தாயோநீர் சுவாமி — இப்போது
போதிக்க வந்தீரோ நீர்சுவாமி

கன்னியுன்மனமிரங்காதென்னவிது
காலுநோகுதடி கண்ணே — பெந்நன்
காலுநோகுதடி பெண்ணே

முன்னுமிதியடி முனைமேலே நிற்பார்க்கு
முந்திக்கால் வலிக்குமோசாமி — அவர்
தந்திரவித்தைதான் சுவாமி

அன்னமே குயிலே நீ வந்து
கதவு திறப்பாயே பெண்ணே
நொந்துமனதிருக்காதே

கதவைத் திறவெனப் பதனமாய்ப் பேசுகிறீர்
கைப்பொருள் கொண்டு வந்தீரோ — சுவாமி
செப்படி வித்தைதானோ

குன்றக்குடியினில் இன்றுகாணிக்கைவைத்த
கொலுசுகளிருக்குது தாறேன் — பெண்ணே
கொலுசுகளிருக்குது தாறேன்

பஞ்சணைவள்ளியைக் கொஞ்சியிருந்தவள்
பாதத்திலிட்டு நீர்பாரும் நல்ல சோதிப்
பிரயையதாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பூசநாளினிற் காணிக்கையாய்த்தந்த
தண்டைகளிருக்குது தாறேன் — பெண்ணே
கொண்டுகளிப்பது கூடே

வைப்பாட்டிவள்ளியின் கூட்டுக்குச்சென்றநீர்
வைத்தவள்காலுக்கும் — அவள்
சித்தமாயிருந்திடச் சேரும்

சத்திராபூரணைசேர்ந்து வைத்திருக்கிற
செவ்வந்திமாலைகள் தாறேன் — பெண்ணே
சினத்தைந்தணிந்துநீசேரும்

தேவதேவாவிந்தப் பூருவநகைகளைத்
திருடியெடுத்து வந்தீரோ — சுவாமி
கருதியெடுத்து வந்தீரோ

இந்திரலோகத்து வெள்ளையானைவந்திருக்கி
தனைக்கண்ணாலுற்றுப்பாரும் — எந்தன்
மனதுப்புண்ணைச் சற்றேதீரும்

கண்ணினாற் பார்ப்ப தென்பெண்ணாய்
வளர்த்தெனைக் காத்துக்கொடுத்துங் கையில் — நல்ல
கூத்திக்குப்போகவோ சுவாமி

இந்தக்கதவினைத் திறக்கவேமந்திரம்
இருக்கிற தென்னிடம் பாரும் — பெண்ணே
சிரித்திடக்காட்டுறேனீரும்

தட்டிக்கதவினைத்திறந்திடினானும்மைத்
தழுவியணைகுவேன் சுவாமி — உம்மைக்
கொழுவிப்பிணைகுவேன்பாரும்

ஐந்துடனாறெழுத்துநதியேதட்டிட
ஆவென்று திறந்தது தானும் — மெல்ல
ஓவென்று வந்தனன் காரும்

திறந்திடுபொழுதினிற் பூமழைபொழிந்திடத்
தெய்வானையுஞ் சேர்ந்தான் — பூமி
உய்வது சத்தியந்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பற் பாட்டு

## ஏலேலோ தந்தையா ஏலேலோ

வெய்ய கனலோங்கி நிற்காரியம் பார்க்க
வெம்மரவி ஆஞ்சாலி ஆஞ்சான் பிடிக்க
துய்யகுண மாரீசன் சுக்கான் பிடிக்க
சொல்லரிய ஈசனும் ஆட்கணங்கள் ஆக
பதுமனையில் இந்திரன் கற்பு *நிலை பார்க்க
வெற்றிசை வர்மனும் வெம்பாவி சாம்பா
ஐயமிலா இருதுளி ஓடலியாக
அழகவதி கலாசுந்தன் கலாசுந்தனாக
மயில் மேவும் மலை மேவும் ஆகாயக்கடலில்
வடிவுள்ள பாய்விரித்தோடுதே கப்பல்
ஏலகலோ தத்தையா ஏலகலோ
ஏலகலோ தத்தையா ஏலகலோ
பஞ்சபூத பலகை கப்பலாய்ச் சேர்த்து
பாங்கான ஓங்கார பாய்மரம் நாட்டி
நெருசுமனம் குத்தி ஆங்கார சித்தம்
மானாசி மானமும் கயிறாக சேர்த்து
ஐந்தெழுத்தைக் கட்டி சரக்காக ஏற்றி
ஐம்பூதந் தன்னிலே சுக்கான் நிறுத்தி
நெஞ்சிற் கடாச்சத்தால் சீனிப்பாய் தூக்கி
சிவனுடைய திருப்பொருளை சிந்தையுள் நினைந்து
தஞ்சலானந்த வெள்ளத்தில் தானே போகுதடா
சர்வரதம் பிரம்மரதம் ஏகரதம்

(ஓலேலோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலவையும் கேழ்வையும் தள்ளடா தள்ளு
கருணைக் கடலிலே தள்ளடா கப்பல்
நிக்குணம் தன்னிலே தள்ளடா தள்ளு
நிறைந்த பரிபூரணத்தால் தள்ளடா கப்பல்
திக்குத்திசை யெங்கும் தள்ளடா தள்ளு
திருமந்திரம் சொல்லித் தள்ளடா கப்பல்
முக்கண்ணை மூன்றையும் தள்ளடா தள்ளு
முப்பாலுக் கப்பாலே போகுதடா கப்பல்
பக்கமுடன் கீழ்மேலும் தள்ளடா தள்ளு
பரவெளிற் கப்பாலே போகுதடா கப்பல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவராக விளங்கி இறைபதம் அடைந்த **அமரர் வேலுப்பிள்ளை சிவராசா அவர்களின்** மரணச் சடங்கிலும் இறுதிக்கிரியைகளிலும்கலந்துகொண்டோருக்கும் பல்வகையிலும் எம்மை ஆறுதற்படுத்தி உதவிகள் புரிந்த உற்றார் உறவினர் நண்பர்கள் அயலவர்களுக்கும் அஞ்சலி உரை வழங்கிய அன்பர்களுக்கும் அவரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் முதலிய கிரியைகளில் கலந்து எங்கள் தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் ஈடுபட்டோருக்கும் இம்மலரை அழகுற அச்சிட்ட சங்கானை திருமொழி அச்சகத்தினருக்கும் எங்கள் இதயங் கலந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்,

நன்றி

வணக்கம்

துளாய் வீதி,
வட்டுக்கோட்டை.
24-10-2001

— பிள்ளைகள் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமொழி அச்சகம்
சங்கானை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org